??? ?????????????????? ?????????? ????????? ?????????? – ?????????? ??.??????????

நல்லிணக்கத்தை விரும்புபவராக ஜனாதிபதி இருந்தால் மேர்வின் சில்வாவை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

மேர்வின் சில்வாவின் சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பாக கண்டனம் வெளியிட்டு இன்று ஊடகங்களுக்கு அறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ள அருட்தந்தை மா.சத்திவேல், அவரது கருத்து பௌத்தத்தின் பெயரால் புத்தனின் போதனைகளை அவமதிக்கும் செயல் என குற்றம் சாட்டியுள்ளார்.

அரசியல் கட்சிகளாலும் மக்களாலும் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள மேர்வின் சில்வா, நாடு வீழ்ச்சியில் இருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் அடிமட்ட சிங்கள பௌத்த மக்களை தூண்டி விடும் இழிவான அரசியலை மேற்கொள்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்றைய பேரினவாத அரசியலை முன்னெடுக்கும் அரசியல் தலைமைகளுக்கும் இவர்கள் தேவையாக உள்ளதாலேயே இவர்கள் சுதந்திரமாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளனர் என்றும் இந்நிலை நீங்காத வரை நாட்டுக்கு அரசியல் எதிர்காலம் இல்லை என்றும் மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசியல் தீர்வு என 13 ஆவது திருத்தத்தை வைத்துக் கொண்டு பூச்சாண்டி காட்டும் தற்போதைய ஜனாதிபதியின் நரி தந்திரத்திற்குள் தமிழர்களை வீழ்த்தி விடாது சுய உரிமைக் காக்கும் அரசியலுக்காக தமிழ் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

?????????????? ???? ????????????????
???????? ???????? ????????? ???????

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் நேற்றுமுதல் தண்ணீர் வசதியின்றி நோயாளர்கள் மற்றும் மருத்துவமனை அதிகாரிகள் தவித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் அத்தியட்சகர் கருத்துத் தெரிவிக்கையில்"எமது மருத்துவ மனைக்கு நீர் வழங்கும் பிரதான நீர்ப்பம்பி செயலிழந்துள்ளமையினால் நேற்று முதல் தண்ணீர் வசதியின்றித் தவித்து வருவதாகவும், இதனையடுத்து சிறிய ரக தண்ணீர் பம்பி மூலம் பகுதி பகுதியாக நீர் வசதி செய்யப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய தண்ணீர் பம்பியை கொள்வனவு செய்வதற்கு பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனையின் அனுமதியை பெற்று மீளமைக்க கால தாமதமாகலாம் என்றும் யாராவது 7.5 குதிரை வலு கொண்ட நீர்ப்பம்பி ஒன்றினை கொடையளித்தால் தண்ணீர் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படலாம் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே குறித்த பகுதியில் ஒரு லீற்றர் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் 130 ரூபாயில் இருந்து 150 ரூபாய் வரையும் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.